Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

# Tamil Matrimonial Tradition through Sangam Literature

**K. Veeraragavan,** Assistant Professor, Department of Tamil,
S.A. College of Arts and Science, Thiruverkadu, Chennai - 77, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3393-9036**
**Received:** 17 January 2025; **Revised:** 22 May 2025; **Accepted:** 15 June 2025; **Available Online:** 30 June 2025.

## Abstract

*Marriage is a ritual followed by Tamils since ancient times. It brings together a male and a female individual from different families and binds them in a union. After this ritual, the male and the female are called husband and wife. Tamil ancestors have classified marriage which is an access to family life. It is of into two stages, namely 'kalavu' and 'karpu'. The literatures from the Sangam period widely mention marriages that had followed these two stages. These marriages are connected to the virtues and culture of the Tamils. But in this modern world, Tamils have become admirers of Western culture and have changed the marriage rituals. This article attempts to explain how these Western interjections are contrary to our culture and why ancient marriage rituals are appropriate to Tamil culture.*

**Keywords:** Sangam Period, Marriage, Rituals, Virtue, Kalavu, Karpu.

## References

[1] Aarumugam, K., Munaivar N. Lenin. “Tamilar Panpaadum Kalachaaramum.” *Pranav Tamiliyal Aayvithazh*, Volume - 3, Sirappithazhal - 1, Year- 2023, pp. 304.
[2] Rasamanickanar, Ma. *Tamilar Thirumanam*. Mullai Pathippagam, Anna Nagar Maerku, Chennai – 40.
[3] Rajkumar, La.Ku.Su. “Kurunthogaiyil Akamarapuvazhi Seithikal.” *Tamil Mozhi Matrum Ilakkiya Pannattu Aayvithazh*, Volume - 2, Issue - 1, July -2019, pp. 220.
[4] Sasivalli, Sa. *Tamilar Thirumanam*. Ulaga Tamil Aaraichi Niruvanam, Chennai -113, 1985.
[5] Subbarayan, Ma. “Tamilar Panpaatil Kaadhal.” *Pranav Tamiliyal Aayvithazh*, Volume - 3, Sirappithazhal - 1, year- 2023, pp. 182.
[6] Tamilannal. *Tholkappiyam*. Chellappa Pathippagam, Madurai, 2021.
[7] Durga, M. “Kaalach Soozhalum Tamilar Thirumana Muraihalum.” *India Panmozhi Aaraichi Matrum Maembattu Ithazh*, Volume - 3, Sirappithazhal - 1, August - 2022. pp. 01.
[8] Bhavani, Su. “Maanudaviyal Nokkil Thirumanach Sadangumurai.” *Sarvadesath Tamil Aayvithazhal*, Volume - 4, Sirappithazhal - 26, year- 2022, pp. 26.
[9] Puliyoor Kesigan. *Akananooru Moolamum Uraiyum*. Saradha Pathippagam, Chennai - 14. June - 2010.
[10] Puliyoor Kesigan. *Kurunthogai Moolamum Uraiyum*. Saradha Pathippagam, Chennai, 2010.
[11] Puliyoor Kesigan. *Thirukkural Puthiya Urai*. Poombukar Pathippagam, Chennai, 2010.
[12] Puliyoor Kesigan. *Tholkappiyam Porulathikaaram* (Muzhumaeyum), Paari Nilaiyam, Chennai -108, 2017.
[13] Puliyoor Kesigan. *Purananooru Moolamum Uraiyum*. Saradha Pathippagam. Chennai 14.
[14] Puliyoor Kesigan. *Manimekalai Moolamum Uraiyum*. Paari Nilaiyam, Chennai - 01.

**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

[15] Maruthidhasan. *Tamil Thirumanam*. Narmadha Pathippagam, Chennai.
[16] Ramakrishnan, S. *Kriyaaavin Tharkaala Tamil Akarathi*. Kriyaa Pathippagam, Chennai, 2024.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

# சங்க இலக்கியத்தில் தமிழர் திருமண முறை

**க. வீரராகவன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு, சென்னை -77. தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3393-9036**

**ஆய்வுச் சுருக்கம்**

*திருமணம் என்பது பழங்காலம் முதல் தமிழர்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற சடங்கு முறை ஆகும். இது வெவ்வேறு குடும்பங்களில் பிறந்த ஒரு ஆணினையும் பெண்ணையும் குடும்பம் என்ற அமைப்பிற்குள் இணைக்கின்றது, திருமணத்திற்கு முன்பு ஆண், பெண் என்று அழைக்கப்பட்டவர்கள் திருமணத்திற்கு பின்பு கணவன், மனைவி என்று அழைக்கப்படுகின்றனர். இல்லறத்தின் நுழைவு வாயிலாக திகழ்கின்ற திருமணத்தினை நம் முன்னோர்கள் களவு, கற்பு என இரண்டாகப் பகுத்துள்ளனர். இந்த இரண்டு முறைகளை பின்பற்றி நடைபெற்ற திருமணத்தையே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன, இத்தகைய திருமணம் ஒரு சடங்கு முறை மட்டுமன்று அது தமிழர்களின் ஒழுக்கத்தோடும், பண்பாட்டோடும் தொடர்புடையதாக இருக்கிறது, ஆனால் வளர்ந்து வரும் நவீன உலகில் மேல்நாட்டு நாகரிகங்களுக்கு இன்றைய தலைமுறையினர் அடிமையாவதால் தமிழர் திருமண முறையில் பல்வேறு மாற்றங்களை காண முடிகிறது இத்தகைய திருமணம் நமது பண்பாட்டிற்கு ஏற்றதாக இல்லை என்பதை எடுத்துக் கூறி நமது முன்னோர்கள் கடைப்பிடித்த திருமண முறையே தமிழர் பண்பாட்டிற்கு ஏற்றது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**கலைச்சொற்கள் :** சங்க காலம், திருமணம், சடங்குகள், அறம், கலவு, கற்பு.

**முன்னுரை**

நாடோடிகளாக வாழ்ந்த மனிதனை நிலையாக ஓரிடத்தில் வாழ வைத்தது வேளாண்மை தொழில். நிலையாக வாழ ஆரம்பித்த மனிதன் குழுக்களாகவும் கூட்டமாகவும் வாழ ஆரம்பித்தான். அவ்வாறு வாழத் தொடங்கிய மனிதர்களை தங்களுக்குள் ஓர் உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவர்களது வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு பந்தமே திருமணம். ஒன்றாக ஒரு இல்லத்தில் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்கு இந்த சமுதாயம் வழங்கப்படுகின்ற அங்கீகாரமாக திருமணம் பார்க்கப்பட்டிருக்கின்றது. இந்த திருமணம் என்பது பெற்றோர்களால் பெண் பார்த்து, நிச்சயம் செய்து, வீட்டை அலங்கரித்து, உறவினர்களை வரவழைத்து திருவிழா போன்று நடத்தப்பட்ட திருமணத்தை கற்பு மணம் என்றும், யாரும் அறியாமல் ஒரு ஆணும் பெண்ணும் உள்ளத்தால் ஒன்றுபட்டு காதலித்து திருமணம் செய்து கொண்டதை களவு மணம் என்றும் வரையறை செய்துள்ளனர். அவ்வாறு நடைபெறாத திருமணங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டதுமில்லை அதற்கு மதிப்பு அளித்ததும் இல்லை.

களவு மணம், கற்பு மணம் என்ற இரண்டு முறைகளிலும் திருமணம் செய்து கொண்ட ஆணும் பெண்ணும் சங்க காலத்தில் தங்களுக்குள் மனக்கசப்பு, கருத்து வேறுபாடு, வறுமை நிலை என பல இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் தங்களுக்குள் இருந்த அன்பின் காரணமாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும் அவ்வப்போது ஏற்படக்கூடிய வறுமை நிலையினை சமாளித்தும் இன்பமோடு வாழ்ந்ததை சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இவைதான் இன்று உலகில் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்பதற்கும், உலகில் ஒழுக்கத்தோடு ஒரு இனத்தவர்கள் வாழ்கின்றனர் என்றால் அது தமிழினம் என்ற பெருமையினை அடைவதற்கும்

காரணமாக இருந்துள்ளது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் வாழ்கின்ற பலரும் மேல்நாட்டு நாகரீகங்களுக்கு அடிமையாகி வருவதனால் தற்போது நடைபெறுகின்ற திருமணங்களில் தமிழருடைய மரபானது மாற்றமடைந்து வருவதனை காண முடிகின்றது அதோடு மட்டுமல்லாமல் அவ்வாறு நடைபெற்ற திருமணங்களையும் மூலம் இணைந்து வாழ்கின்ற தம்பதியர்கள் ஒருவர் மீது ஒருவர் தூய்மையான அன்பு இல்லாமலும் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படுகின்ற பொழுது அதனை பொறுத்துக் பொறுத்துக் கொள்ளாமலும் பிரிந்து வாழ்கின்றனர். இன்னும் ஒரு சிலர் தமிழ் சமுதாயத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் திருமணம் செய்து கொள்ளாமலேயே இணைந்து வாழ்வதனையும் காண முடிகின்றது. இது தமிழர் பண்பாட்டிற்கு ஏற்புடையதாக இல்லைததாகவும் அவர்களது பெருமையினை குன்றச் செய்வதாகவும் உள்ளது எனவே சங்க கால தமிழர் திருமண முறையினை சங்க இலக்கியங்கள் வழி நின்று ஆராய்வதாக கட்டுரை அமைகின்றது.

**திருமணம் :**

திருமணம் என்பதற்கு சங்க காலத்தில் மன்றல், வதுவை, வரைவு, மணம்... என பல்வேறு சொற்கள் வழங்கப்பட்டுள்ளது. உடலால் இருவர் இணைவது திருமணம் அல்ல, உள்ளத்தால் இருவர் இணைவதே திருமணம் என்பதை இந்த உலகிற்கு பறைசாற்றியவர்கள் தமிழர்கள். சங்ககாலத்தில் உள்ளம் ஒன்றாத இருவர் இணைந்து திருமணம் செய்து கொண்டதாக எவ்விடத்திலும் காணப்படவில்லை. அதே வேளையில் உள்ளம் ஒன்றிய இருவர் இணையாமல் போனதாகவும் குறிப்புகள் காணப்படவில்லை. இவற்றையெல்லாம் காண்கின்ற பொழுது சங்க காலத்தில் திருமணத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

> **திருமணம் என்பதற்கு ‘ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகும் நிகழ்ச்சி அல்லது சடங்கு கல்யாணம் Marriage, Wedding’ என்று தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. (கிரியாவின் தற்காலத் தமிழகராதி. பக் 649)**

ஒரு ஆணும் பெண்ணும் மனமொத்து திருமணம் செய்து கொள்கின்றனர் ஆனால் இத்தகைய திருமணம் பெற்றோர் சம்பந்தத்துடனும் பெற்றோர் சம்மதம் கிடைக்காத நிலையிலும் கூட நடைபெற்றுள்ளது என்பதை காண முடிகிறது. இவர்கள் முன்பின் தெரிந்தவராகவோ உறவினர்களாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்கள் மனம் ஒத்திருக்க வேண்டும் என்பதில் மட்டும் உறுதியாக இருந்துள்ளனர். இல்லறத்தின் நுழைவு வாயிலாக இருக்கக்கூடிய திருமணம் என்பது கரணம் என்ற சடங்கு முறையோடு தொடங்க வேண்டும்.

> **கரணம் என்பதற்கு விளக்கம் தரும் தேவநேயப்பாவாணர் திருமணத்திற்கு உரிய ஒப்பந்தம் அல்லது தாலி கட்டும் சடங்கு கரணம் எனப்படும். என்று குறிப்பிடுகின்றார். (தேவநேயப்பாவாணர்.ஞா. தமிழர் திருமணம், பக். 357)**

திருமணம் செய்து கொள்ளாமல் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதை தமிழ்ச் சமூகம் மதித்ததும் இல்லை, அவர்களை ஏற்றுக் கொண்டதும் இல்லை என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**திருமண வகை :**

1. **அறநிலை [பிரமம்] கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியாய் இருப்பவன் ஒருவனுக்குத் தானமாகக் கொடுப்பது**
2. **ஒப்பு [பிரசாபத்தியம்] பெண்வீட்டார் வேண்ட ஆண்வீட்டார் இசைந்து பெற்றோர் திருமணம் செய்து தருவது.**
3. **பொருள்கோள் [ஆரிடம்] ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுத்துப் பெறும் திருமணம்.**

Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

4. **தெய்வம் [தெய்வம்] வேள்வி செய்வோர் பலருள் ஒருவருக்குத் தன் மகளை வேள்வித் தீ முன் மணம் முடித்துத் தருவது.**
5. **யாழோர் கூட்டம் [காந்திருவம்] ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம்.**
6. **அரும்பொருள் வினை [அசுரம்] பொருளைக் கொடுத்துப் பெண்ணை திருமணம் செய்தல்.**
7. **இராக்கதம் [இராக்கதம்] தலைமகன் தன்னினும், தமரினும் பெறாது, வலுக்கட்டாயமாகப் பெண்ணை அடைதல்.**
8. **பேய்நிலை [பைசாசம்] கள்ளுண்டு களித்தார் மாட்டும், துயின்றார் மாட்டும் உடலின்பம் துய்த்தல்.**

இவ்வாறு திருமணம் எட்டு வகையாக குறிப்பிடப்பட்டாலும் சங்க காலத்தில் பெரும்பாலும் யாழோர் கூட்டம் என்று சொல்லக்கூடிய களவின் வழிவந்த திருமணமே நடைபெற்று வந்துள்ளது என்பதை சங்கப் பாடல்களைக் காணின் அறிந்து கொள்ளலாம்.

**களவு மணம்**

தலைவனும் தலைவியும் முன்பின் அறியாதவர்களாக இருந்தாலும் தங்கள் ஊழ்வினையின் காரணமாக ஒருவரை ஒருவர் சந்தித்து காதல் கொள்கின்றனர்.

**யாயும் ஞாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே! (குறுந்தொகை, பா. 40)**

சிறு வயது முதலே ஒன்றாக சேர்ந்து விளையாடிய ஆண் பெண் பருவம் எய்துகின்ற போது காதல் கொண்டு தலைவன் தலைவி ஆகின்றனர் என்பதை,

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே (தொல். கள. நூற். 2)**

என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

**கற்பு நெறி**

களவு வாழ்க்கையில் பிறர் அறியாதபடி தலைவனும் தலைவியும் இணைந்து வாழ்ந்ததை உலகுக்கு அறிவைக்கும் ஒரு சடங்காக திருமணத்தை பார்க்கப்படுகிறது ஏனெனில் பின்பு வரக்கூடிய தலை முறையினர் களவு வாழ்க்கையில் தலைவியோடு இருந்ததை மறைத்து விடக்கூடிய சூழல் ஏற்படும் என்பதை மனதிற்கு கொண்டு திருமணம் என்று சொல்லக்கூடிய சடங்கு முறை கட்டாயம் தேவைப்படும் என்பதை உணர்ந்து தொல்காப்பியர் கூட **'கற்பெனப்படுவது காரணமோடு புணர…** என்று குறிப்பிடுகின்றார் போலும்.

**கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே (தொல். கற். நூற். 140)**

என்ற நூற்பாவிற்கு விளக்கம் தரும் உரையாசிரியர், திருமணம் செய்து கொள்வதற்குரிய தகுதியை உடைய ஆண் மகனுக்கு, திருமணம் செய்து கொடுத்தற்கு தகுதியுடைய பெண் வீட்டார் இசைந்து பெண்ணினை கொடுக்க ஆண் வீட்டார் ஏற்றுக் கொள்வது திருமணம் என்று விளக்கம் தருகின்றார், என்பதைக் காண்கின்ற பொழுது பெற்றோர் இசைவுடன் நடந்த திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் என்பதை அறிந்து அறிந்து கொள்ளலாம். பெற்றோர் இசைவுடன் திருமணம் நடைபெறும் என்பதைக் கூறிய தொல்காப்பியரே அவர்கள் சம்மதம் இன்றியும் திருமணம் நடைபெறும் என்பதை,

**கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான (தொல். கற். நூற். 141)**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். இதற்கு சான்றாக சங்க இலக்கிய குறுந்தொகை பாடல் ஒன்றில் தலைவனும் தலைவியும் விரும்புகின்றனர் இவர்களது காதல் வாழ்க்கை தோழி மற்றும் தோழியினுடைய தாய் ஆகிய இருவர்களுக்கு மட்டுமே தெரியும் இவ்வேளையில் தலைவனுக்கு தலைவியை திருமணம் செய்து வைக்க அவளது பெற்றோர் இசைவு தெரிவிக்காத வேலையில், தலைவன், தலைவி ஆகிய இருவரும் உடன் போக்கை மேற்கொண்டு திருமணம் செய்து கொண்டு இன்பமோடு வாழ்ந்து வருகின்றனர் என்பதை செவிலித்தாயின் வாயிலாக தலைவியின் பெற்றோர் அறிந்து கொள்கின்றனர். இதனை,

**நாலூர்க் கோசர் நன்மொழி போல**
**வாயா கின்றே தோழி ஆய்கழற்**
**சேயிலை வெள்வேல் விடலையொடு**
**தொகுவளை முன்கை மடந்தை நட்பே (குறுந்தொகை, பா. 15)**

என்ற பாடலின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன் தலைவியர் இவ்வாறு உடன்போக்கை மேற்கொண்டாவது தங்களது ஒழுக்க நெறியை காக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு என்பது இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

**திருமணம் நடைபெறும் முறை**

களவின் வழிவந்த கற்பு, களவின் வழிவரா கற்பு என திருமணத்தை இரண்டாக வகுத்த சான்றோர் அது நடைபெறும் சூழ்நிலையைக் கூட இரண்டாக பகுத்துக் கூறினர். அதாவது, தலைவன் தலைவியரின் காதல் வாழ்வு உறவினர்களுக்கும் ஊர் மக்களுக்கும் தெரிவதற்கு முன்பு நடைபெறுதல், தலைவன் தலைவியரின் காதல் வாழ்வு உறவினர்களுக்கும் ஊர் மக்களுக்கும் தெரிந்த பின்பு நடைபெறுதல் என இரண்டாக வகுத்தனர். இரண்டாகப் பகுத்துக் கொண்டாலும் அவற்றில் கடைபிடிக்க வேண்டிய சடங்கு முறைகளில் எவ்வித வேறுபாடும் இன்றி திருமணத்தை நடத்தினர் என்பதை சங்க நூல்களில் ஒன்றான அகநானூற்று பாடல் தெளிவாக பதிவு செய்துள்ளது.

**வீட்டை அலங்கரித்தல்**

திருமணம் நடைபெறும் வீட்டினை பார்ப்போர், அந்த வீட்டில் ஏதோ ஒரு விழா நடைபெற உள்ளது என்பதை அவர்களே அறிந்து கொள்ளும் அளவிற்கு அந்த வீடானது அழகாக புதுப்பிக்கப்பட்டு காண்போரை கவரும் விதமாக அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். இந்த வழக்கம் இன்றைய காலத்தில் மட்டுமல்லாது சங்ககாலம் முதலே தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதனை

**கடல்அம் தானை கை வண் சோழர்,**
**கெடல் அரு நல் இசை உறந்தை அன்ன,**
**நிதியுடை நல் நகர்ப் புதுவது புனைந்து,**
**தமர் மணன் அயரவும் (அகநானூறு, பா. 369)**

என்ற பாடல்வரிகள் கடல் போன்று பெரும்படையையும், கொடைத்தன்மையும் உடைய, சோழனைப் போல செல்வம் வளமுடைய பெற்றோர்கள் உறவினர்களை அழைத்து வீட்டினைப் புதுப்பித்து திருமணத்தை நடத்தி வைப்பார் என்பதை காண்கின்ற பொழுது சங்க காலத்தில் திருமணத்திற்கு முன்னர் வீட்டினை புதுப்பிக்கும் வழக்கம் இருந்துள்ளதை அறிந்துக் கொள்ள முடிகின்றது.

**புதுமணல் பரப்பல்**

தமிழர்கள் விழாக்கள், சடங்குகள் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறும் பொது இடங்களில் உள்ள பழைய மணலை அகற்றிவிட்டு புதிய மணலை பரப்பியதோடு வீதி எங்கும்

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

தோரணம் கட்டி மன்றங்களில் பூரண கும்பம், மங்கள விளக்குகளை ஏற்றி, அழகுபடுத்தி வாழைமரம், பாக்கு மரம் ஆகியவற்றை கட்டிவைத்து பலவிதமான கொடிகளை தொங்கவிட்டு ஒவ்வொரு வீட்டின் முன்புள்ள திண்ணையில் இருக்கும் தூண்களில் முத்து மாலைகளை தொங்கவிட்டனர் என்று மணிமேகலை தெரிவிக்கின்றது.

**காய்க் குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்**
**பூங்கொடி வள்ளியும் கரும்பும் நடுமின்**
**பத்தி வேதிகை பசும்பொன் தூனத்து**
**முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்**
**விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்**
**பழ மணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் (மணி.மே. விழா. கா., பா. 17)**

**திருமண பரிசம் போடுதல்**

திருமணத்திற்கு முதல் நாள் மாலையில் அல்லது இரவில் பரிசம் போடுதல் என்ற சடங்கு முறை இன்றளவும் தமிழர் பண்பாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற வழக்கமாகும்.. இன்று மணமகன் வீட்டார் வரதட்சனை என்ற பெயரில் பணமும் பொருளும் பெறுவதைப் போன்று அக்காலத்தில் மணமகள் வீட்டார் முறை விலை, சிறுவளை விலை, பாசிழை விலை என்ற பெயரில் பணமும் பொருளும் பெற்றனர். இதனையே பரிசம் போடுதல் என்ற சடங்காக குறிப்பிட்டனர். இந்த பாசிழை விலை குறித்த செய்தியை,

**பெருங்கடல் முழக்கிற்று ஆகி யாணர்**
**இரும்பு இடம் படுத்த வடுவடை முகத்தர்**
**கருங்கட் கோசர் நியமம் ஆயினும்**
**உறும் எனக்கொள்குநர் அல்லர்**
**நறுநுதல் அரிவை பாசிழை விலையே (அகநானூறு, பா. 90: 11 - 14)**

என்ற அகநானூற்று பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம். கோசர்கள் என்ற அரச பரம்பரையின் வளமிக்க புது வருவாயை உடைய நியமம் என்ற ஊரினையே பாசிழை விலையாக கொடுத்தாலும் பெண்ணின் விட்டார் ஏற்பவர் அல்ல என்ற செய்தி இப்பாடலில் இடம் பெற்றிருப்பதை காணமுடிகிறது.

- **புகழுடைய சந்திரன் உரோகிணியுடன் கூடும் (பௌர்ணமி) நல்ல நாளில் இருள் நீங்கும் அழகிய விடியற்காலை திருமணம் நடத்துதற்குறிய நாளாக கருதினர்.**
- **பறவைகளின் சகுனம் பார்த்து வரிசையாக கால்களை நட்டுப் மணப்பந்தல் அமைக்கபட்டது. மணப்பந்தல் முழுவதும் வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட குளிர்ந்த மென்மையான மணலைப் பரப்பி விட்டனர்.**
- **மனையில் விளக்குகளை ஏற்றி மணப்பந்தல் முழுவதும் மலர்மாலைகள் கொண்டு மிக அழகாக அலங்கரித்து. தலையின் உச்சியில் தண்ணீர் குடத்தினை ஏந்தியவர்களும், மண் பானையினை கைகளில் ஏந்திய மங்கல மகளிர்களும் திருமணத்திற்கு முன்பும் பின்பும் தரவேண்டிய சீர் முறைகளை முறையாக தந்த பின்னர் குழந்தைகளை பெற்றெடுத்த மகளிர் நால்வர் கூடி நின்று திருமணத்தை நடத்தினர்.**
- **திருமணத்தில் மத்தள வாக்கியமும் பலவித இசைக்கருவிகளும் முழங்கியது**
- **திருமணத்தின் போது மணப்பெண்ணைகற்பிலிருந்து தவறாது கணவனை பேணிப் பாதுகாக்கும் நல்ல மனைவியாக ஆவாயாக என்று நீரோடு மலர்கள் நெல் ஆகியவற்றை கலந்து பெண்ணின் தலையில் தூவி வாழ்த்தினர்.**
- **திருமண நாளன்று உளுந்தம் பருப்பு மிகுதியாக சேர்த்து சமைக்கப்பட்ட உணவினை உறவினர்களுக்கு விருந்தளித்தனர்.**
- **வெண்மையாக சமைக்கப்பட்ட சாதத்துடன் செம்மறி ஆட்டின் கறியை சமைத்து உறவினர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது.**

**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

இவ்வாறான முறைகளை பின்பற்றி சங்க காலத்தில் வதுவை திருமணம் நடைபெற்றது என்பதை அகநானூற்றுப் பாடல்கள் 186,86 வெளிப்படுத்துகின்றன.

**பொன்தாலி அணியும் மரபு**

ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து கணவன் மனைவியாக வாழ்வதற்கு அடையாளமாக திகழ்வது அப்பெண் அணியும் தாலிக்கயிறு மற்றும் காலின் விரலில் அணியும் மெட்டியும் ஆகும். திருமணம் செய்து கொள்ளாமல் இணைந்து வாழும் வாழ்க்கை உண்டு என்றாலும் அவர்களைக் கணவன் மனைவியாக தமிழ் சமூகம் ஏற்றுக் கொண்டதுமில்லை அவர்களுக்கு உரிய மதிப்பினை அளித்ததும் இல்லை.. சமுதாயத்தில் இன்று ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளாமல் தாலி கட்டாமல் இணைந்து வந்தாலும் அவர்களை இழிவாக பார்ப்பதோடு பண்பாடற்ற வரவும் கருதி ஒதுக்கி விடுவர். தமிழர் பண்பாட்டில் தாலி அணியும் மரபு மங்கல நிகழ்வாக கருதப்படுகின்றது. பெண் திருமணமானவள் என்பதை உள்ளோருக்கும் வெளியோருக்கும் எடுத்துக் காட்டவும் திருமணம் செய்துகொள்ளும் ஆணிற்கு இவள் உரிமை உடையவர் என்பதை சுட்டிக்காட்டவும் தாலி கட்டும் மரபு தோன்றியது ஆனால். சங்க காலத்தில் தாலி அணியும் மரபு தமிழர் பண்பாட்டில்இருந்துள்ளதே தவிர, தாலி கட்டியதற்கான சான்றுகள் ஒரு இடங்களில் கூட காணப்படவில்லை. ‘இழை’ என்னும் சொல் ‘தாலி’ என்பதையே குறிக்கும் விதமாக சங்கப் பாடல்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதை,

**ஈகை அரிய இழையணி மகளிரொடு.. (புறநானூறு, பா. 127)**
**மழைபட் டன்ன மணல்மலி பந்தர்**
**இழைஅணி சிறப்பின் பெயர் வியர்ப்பு ஆற்றி (அகநானூறு, பா. 136)**

என்ற *அகநானூறு* மற்றும் *புறநானூறு* பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். எனவே தாலி அணியும் மரபு என்பது தமிழர் கண்ட நெறியாக உள்ளது அதனை சங்க காலம் முதல் இன்று வரை தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர் என்பது கண்கூடு. தலைவன் தலைவி காதலித்து பெற்றோர் இசைவுடன் திருமணம் செய்து கொள்ளல், காதலித்த பின் பெற்றோர் இசைவு தர மறுக்கின்ற பொழுது உடன் போக்கை மேற்கொண்டு திருமணம் செய்து கொள்ளல், பெற்றோர்களால் நிச்சயித்து திருமணம் செய்து கொள்ளல் என்ற இம்மூவகையானும் ஏதேனும் ஒரு நிலையில் திருமணம் நடைபெற்ற பின்பு அம்மனைக்கு கிழத்தியான தலைவி பொன்னால் ஆகிய தாலியை அணிவது அன்று முதல் இன்று வரை மரபாக இருந்து வருகிறது. இதற்கு,

**...பொன்னொடு**
**புலிப் பல் கோத்த புலம்பு மணித் தாலி,**
**ஒலிக் குழைச் செயலை உடை மாண் அல்குல் (அகநானூறு, பா. 7)**

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள், இதற்கு சான்றாக விளங்குகிறது.

**முடிவுரை**

திருமணம் என்பது ஒரு தனி மனிதன் வாழ்வில் நடைபெறக்கூடிய சடங்கு முறையாக இருந்தாலும் அதன் பின்பு வாழ்வில் அவன் எவ்வாறான முன்னேற்றங்களை பெறுகிறான் என்பது அவனுக்கு பெருமை சேர்ப்பதோடு மற்றும் அல்லாமல் அவனது சமுதாயத்திற்கும் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது. சங்க காலத்தில் இதை நன்கு உணர்ந்த தமிழ் சமுதாயம் தலைவன் தான் ஒருவனாக யாரும் அறியா நிலையில் தலைவியின் மீது காதல் கொண்டு வாழ்கின்ற நிலையில் பிற்காலத்தில் தலைவன் வேறொரு பெண்ணின் மீது காதல் கொண்டு தலைவியை ஏமாற்றுவதற்கான வாய்ப்புகள் நிறைய உண்டு என்பதன் காரணமாக சங்ககால தமிழ் சமுதாயத்தினர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் களவின் வழிவந்த கற்பு என்ற ஒரு திருமண முறையினை ஏற்படுத்தினர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. களவின் வழிவரா கற்பு என்ற பெற்றோர் பார்த்து செய்து வைக்கக் கூடிய திருமணத்தில்

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

பின்பற்றக்கூடிய பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெண்கள் நால்வர் மணப் பெண் கைப்பிடித்து மணமகன் கையில் கொடுப்பது, பெண்கள் தலையில் நீர்க் சுமந்து வருதல், வரிசையாக பந்தல் கால் அமைத்து அதன் உள்ளே புது மணல் பரப்புதல் என பல சடங்கு முறைகள் இன்று இல்லாமல் போயிருக்கின்றன, சில மாற்றம் பெற்றிருக்கின்றன, புதிய சடங்கு முறைகளும் புகுத்தப்பட்டுள்ளன. அதோடு மட்டுமல்லாமல் திருமணம் செய்து கொள்ளாமலே ஒரு பெண்ணும் ஆணும் இணைந்து வாழக்கூடிய நிலையினையும் இன்று காணமுடிகின்றது இவையெல்லாம் தமிழர் பண்பாட்டிற்கு ஒவ்வாததாகவும், அவர்தம் பெருமைக்கு இழுக்கு ஏற்படுத்தும் விதமாக அமைகின்றது எனவே சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் பின்பற்றிய முறைகளை பின்பற்றினால் தமிழர் பெருமையும் பண்பாடும் நிலைத்து நிற்கும் என்பது இக்கட்டுரையின் மூலமாக ஆரையப்பட்டுள்ளது.

**குறிப்புகள்**

[1] ஆறுமுகம், க., முனைவர் ந. லெனின். "தமிழர் பண்பாடும் கலாச்சாரமும்." *பிரணவ் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி - 3, சிறப்பிதழ் - 1, ஆண்டு- 2023, பக். 304.
[2] இராசமாணிக்கனர், மா. *தமிழர் திருமணம்*. முல்லைப் பதிப்பகம், அண்ணா நகர் மேற்கு, சென்னை – 40.
[3] இராஜ்குமார், ல.கு.சு. "குறுந்தொகையில் அகமரபுவழிச் செய்திகள்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி - 2, இதழ் - 1, ஜூலை -2019, பக். 220.
[4] சசிவல்லி, ச. *தமிழர் திருமணம்*. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை -113, 1985.
[5] சுப்பராயன், ம. "தமிழர் பண்பாட்டில் காதல்." பிரணவ் தமிழியல் ஆய்விதழ், தொகுதி - 3, சிறப்பிதழ் - 1, ஆண்டு- 2023, பக். 182.
[6] தமிழண்ணல். *தொல்காப்பியம்*. செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2021.
[7] துர்கா, M. "காலச் சூழலும் தமிழர் திருமண முறைகளும்." *இந்திய பன்மொழி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இதழ்*, தொகுதி - 3, சிறப்பிதழ் - 1, ஆகஸ்ட்- 2022. பக் . 01.
[8] பவானி, சு. "மானுடவியல் நோக்கில் திருமணச் சடங்குமுறை." *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி- 4, சிறப்பிதழ் - 26, ஆண்டு- 2022, பக். 26.
[9] புலியூர்க்கேசிகன். *அகநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை - 14. ஜூன் - 2010.
[10] புலியூர்க்கேசிகன். *குறுந்தொகை மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
[11] புலியூர்க்கேசிகன். *திருக்குறள் புதிய உரை*. பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.
[12] புலியூர்க்கேசிகன். *தொல்காப்பியம் பொருளதிகாரம்* (முழுமையும்), பாரி நிலையம், சென்னை -108, 2017.
[13] புலியூர்க்கேசிகன். *புறநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம். சென்னை 14.
[14] புலியூர்க்கேசிகன். *மணிமேகலை மூலமும் உரையும்*. பாரி நிலையம், சென்னை - 01.
[15] மாருதியிதாசன். *தமிழ்த் திருமணம்*. நர்மதா பதிப்பகம், சென்னை.
[16] ராமகிருஷ்ணன். எஸ். *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி*. க்ரியா பதிப்பகம், சென்னை, 2024.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.